# இந்து சமய அறநிலையத் துறை

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத் தலைமை (தொலைபேசி / நிகரி / விவரங்கள்) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | **கிராமக்கோயில் பூசாரிகள் நலவாரியம்**<br>கிராமக்கோயிலில் பணிபுரியும் பூசாரிகள் நலனுக்காக அலுவல் சார்ந்த மற்றும் அலுவல் சாராத உறுப்பினர்களைக் கொண்டு நலவாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இந்நலவாரியத்தின் மூலம் கிராமக்கோயிலில் பணிபுரியும் பூசாரிகளுக்கு ஓய்வூதியம், மருத்துவ உதவி அவரது குழந்தைகளுக்கு உயர்கல்வி, திருமணத்திற்கு நிதி உதவி, மகப்பேறு, கருச்சிதைவு, கருக்கலைப்புக்கு நிதி உதவி, உறுப்பினர் மரணமடைந்தால் அவரது இறுதிச் சடங்கிற்கும் மற்றும் அவரது வாரிசுதாரருக்கு நிதி உதவி, விபத்து ஏற்படின் குழுக்காப்பீடு திட்டத்தின் மூலம் நிதிஉதவி, பூசாரிகளுக்கு புத்தொளி பயிற்சி அளித்தல் போன்ற திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளது. | இத்துறை கட்டுப்பாட்டில் இல்லாத கோயில் பூசாரியாக இருக்க வேண்டும் | உரிய படிவத்தில் மனுச் செய்ய வேண்டும் | சம்பந்தப்பட்ட பிரிவு உதவி ஆணையர் மற்றும் சரக ஆய்வர்கள் | ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, 119, உத்தமர் காந்தி சாலை, சென்னை–600 034<br><br>044–28334811/12/13/15<br><br>நிகரி 044–28334816 |
| 2. | **கருணை இல்லங்கள்**<br>சமுதாயத்தில் ஆதரவற்ற சிறுவர் சிறுமியரை பேணுவதற்கு திருக்கோயில்களில் கருணை இல்லங்கள் இயங்கி வருகின்றன. இத்துறையின் கட்டுப்பாட்டில் 31 திருக்கோயில்களில் 34 கருணை இல்லங்கள் செயல்பட்டு வருகிறது. | பெற்றோர் இல்லாத அல்லது தந்தை இழந்து தாய் வறுமை மற்றும் ஆதரவற்ற நிலையில் உள்ள இந்து மதத்தைச் சார்ந்த 5 வயது முதல் 10 வயது முடிய உள்ள குழந்தைகள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். அவர்களுக்கு உண்ண உணவு, இருப்பிடம் மற்றும் கல்வி ஆகியவை அளிக்கப்படுகின்றன. | ஆதரவற்றவர் என்பதற்கான வருவாய் அலுவலர் சான்று பெற வேண்டும் | சம்பந்தப்பட்ட திருக்கோயில் செயல் அலுவலர்/ அறங்காவலர். | ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, 119, உத்தமர் காந்தி சாலை, சென்னை–600 034<br>044–28334811/12/13/15<br>நிகரி 044–28334816 |
| 3. | **முதியோர் இல்லம்**<br>ஆதரவற்ற ஏழை எளிய முதியோருக்கு முதியோர் இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. பழனி, திருத்தணியில் ஆண்களுக்கும், திருப்பரங்குன்றத்தில் பெண்களுக்கும் நடத்தப்படுகின்றன. | 65 வயதிற்கு மேற்பட்ட ஏழ்மைநிலையில் உள்ள ஆதரவற்ற முதியோர்கள் | ஆதரவற்ற ஏழ்மை நிலையில் உள்ளவர் என்பதற்கான வருவாய் அலுவலரின் சான்று | சம்பந்தப்பட்ட திருக்கோயில் செயல் அலுவலர்கள் | பழனி 04545– 242236/ 04545–242467/ 04545–247765<br>திருத்தணி 27885225<br>திருப்பரங்குன்றம் 0452-2482248 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத் தலைமை (தொலைபேசி / நிகரி / விவரங்கள்) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 4. | <u>சித்த வைத்திய சாலைகள்</u><br>பழனி, குமாரவயலூர், சமயபுரம், பண்ணாரி, மருதமலை, வடபழநி, திருத்தணி, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர் ஆகிய திருக்கோயில்களில் சித்த வைத்திய சாலைகள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. ஆங்கில மருத்துவ மனைகள், பழநி, பிள்ளையார்பட்டி ஆகிய இடங்களில் இயங்குகின்றன. திருச்சி, குணசீலம் திருக்கோயிலில் மனநலக் காப்பகம் இயங்கி வருகிறது. | மேற்கண்ட மருத்துவ மனைகளில் ஏழை எளியோர் மற்றும் பக்தர்கள் மருத்துவ வசதிகளை இலவசமாக பெற்றுக் கொள்ளலாம். | சம்பந்தப்பட்ட திருக்கோயிலில் உள்ள மருத்துவ மனைகளை நேரடியாக அணுகலாம். (மருத்துவர்கள்) | சம்பந்தப்பட்ட திருக்கோயில் செயல் அலுவலர்கள். | திருத்தணி 27885225<br>திருச்செந்தூர் 04639 242221<br>சமயபுரம் 0431 2670460<br>பண்ணாரி 04295 243289<br>மருதமலை 0422 422490<br>குணசீலம் 04326 275210, 275310<br>பழனி 04545– 242236/ 04545–242467/ 04545–247765 |
| 5. | <u>இலவசத் திருமணம்</u><br>இந்து சமயத்தைச் சார்ந்த சமுதாயத்தில் நலிவுற்ற ஏழை எளிய மக்களுக்கு நிதி வசதிமிக்க திருக்கோயில்கள் மூலம் அந்தந்த திருக்கோயிலின் நிதியிலிருந்து திருமணங்கள் நடத்த திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் திருமணம் ஒன்றுக்கு ரூ.5,500 /– செலவில் தகுதியானவர்களுக்குத் திருமணம் நடத்தி வைக்கப்படுகிறது. | 1. மணமகன், மணமகள் இருவருக்கும் முதல் திருமணமாக இருக்கவேண்டும்.<br>2. இருவீட்டாரும் திருமணத்திற்கு இசைவு அளித்திருக்க வேண்டும்.<br>3. இந்து சமயத்தைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.<br>4. மணமகனுக்கு 21 வயதும், மணமகளுக்கு 18 வயதும் பூர்த்தி அடைந்திருக்கவேண்டும்.<br>5. இந்து சமயத்தைச் சார்ந்த ஏழை, எளிய இணைகளாக இருக்கவேண்டும். | இருப்பிடம் மற்றும் இருவீட்டாரின் நிரந்தரக் குடியிருப்புப் பகுதியைச் சார்ந்த வருவாய் அலுவலர் மற்றும் பொது வாழ்வில் உள்ள முக்கிய பிரமுகர் ஆகியோரிடம் விண்ணப்பம் சமர்ப்பிக்கும் தேதிக்கு நெருக்கமான தேதியில் சான்று பெறவேண்டும். | தொடர்புடைய திருக்கோயில் செயல் அலுவலர்கள் / அறங்காவலர்கள். | ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, 119, உத்தமர் காந்தி சாலை, சென்னை–600 034<br><br>044–28334811/12/13/15<br><br>நிகரி 044–28334816 |
| 6. | <u>ஓய்வு ஊதியத் திட்டங்கள்</u><br>அர்ச்சகர், ஓதுவார், வேதபாராயணம், அரையர்கள், திவ்விய பிரபந்தம் பாடுவோர் மற்றும் இசைக்கலைஞர்களுக்கு ஓய்வு ஊதியம் இந்து சமய அறநிலையத்துறைக் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் 20ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயது நிறைவடைந்தோருக்கு அரசு நிதியிலிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.750 /– ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. | 1. திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து இருக்கவேண்டும்.<br>2. 60 வயது நிறைவடைந்திருக்க வேண்டும்.<br>3. ஓய்வூதியம் கோருபவர் விண்ணப்பத் தேதியில் ஏழ்மைநிலையில் இருத்தல் வேண்டும். (வருட வருமானம் ரூ.12,000க்கு கீழ்) | விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்ட விபரங்களுக்கு வட்டாட்சியர் சான்று பெறவேண்டும். | சம்பந்தப்பட்ட சரக உதவி ஆணையர் | ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, 119, உத்தமர் காந்தி சாலை, சென்னை–600 034<br><br>044–28334811/12/13/15<br><br>நிகரி 044–28334816 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத் தலைமை (தொலைபேசி / நிகரி / விவரங்கள்) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 7. | <u>கிராமப்புறப் பூசாரிகள் ஓய்வூதியத் திட்டம்</u><br>இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில்களில் 20 ஆண்டு பணிபுரிந்து 60 வயது நிறைவடைந்த ஒய்வு பெற்ற பூசாரிகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.750 வீதம் வழங்கப்பட்டு வருகிறது. | ஓய்வூதியம் கோருபவர் விண்ணப்பத் தேதியில் பொருளாதார வசதி குறைந்தவராக இருக்கவேண்டும். வேறு வகையான அரசு ஓய்வூதியம் பெறுபவராக இருக்கக்கூடாது. | விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்ட விபரங்களுக்கு வட்டாட்சியர் சான்று பெறவேண்டும். | சம்பந்தப்பட்ட சரக உதவி ஆணையர் | ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, 119, உத்தமர் காந்தி சாலை, சென்னை–600 034<br>044–28334811/12/13/15<br>நிகரி 044–28334816 |